ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

தற்காலத்திலும், முற்காலத்திலும், சுயநலத்தையேபெரிதாக நினைப்பவர்களும், பொது நலத்திற்காகவே பெரும் பாடுபடுவர்களும் உண்டு என்பது பிரத்தியக்ஷத்தாலும், பூர்வீகர்களுடையசரித்திரஆராய்ச்சியாலும் தெரியவருகிறது. தற்காலத்தியவர்களுடைய தற்போதியநடவடிக்கைகள் இப்பொழுது பிரத்தியக்ஷமாகக் காணப்படினும் பல ஆண்டுகள் கழிந்தால் அவை ஓரிடத்திலெழுதி வைக்கப்படின் பழைய சரிததிரங்களாக ஆகும். இதுபோலவே பூர்வீகர்களுடைய நடவடிக்கைகள், அந்தக்காலத்தில் பிரத்தியக்ஷங்களாயினும்அவை தற்போது புராணங்களில் சரித்திரங்களாக எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. தற்காலத்தியவர்களும் தங்களுக்கு வேண்டிய சில விஷயங்களில் அவைகளைப் பிரமாணமாகவும், உதாரணமாகவும் காட்டாமலில்லை. அப்படிப் பொதுநலத்திற்காகவே பெரும் பாடுபட்டு, அருந்தவம்புரிந்து இம்மையிலும்-மறுமையிலும் க்ஷேமத்தைத்தரும் ஸாதனங்களையறிந்து ஸர்வஜனங்களுக்கும் உபயோகப்படும்படி வியவஸ்தைகளைக் கற்பித்து நம்பூர்வீகர்கள் பேருதவிபுரிந்திருக்கிறார்கள். அவைகள்தான் வர்ணாசிரம தர்மங்களென்றும், வைதிக நியமங்களென்றும், வியவஹாரிக்கப்படுகின்றன. அவைகளும் அவர்கள் மனம் போனபடியெல்லாம் கற்பிக்கப்பட்டவைகளல்ல, ஆனால் வேதவாயிலாகக் கண்டறிந்து ஸ்மிருதி ரூபங்களாக ஏற்படுத்தப்பட்டன. அப்படியிருக்கையில் "அவைகளெல்லாம் மோசடியென்றும், வஞ்சனையென்றும், நினைக்காமல் வேதமென்றும், சாஸ்திரமென்றும், ஆகமமென்றும், புராணமென்றும், சிராத்தமென்றும், சடங்கென்றும். குருட்டுவழக்கங்களை நாடி நம் முன்னோர்கள் பிராமணர்களின் வஞ்சக வலையில்சிக்கிக்கொண்டு, தாங்கள் கெட்டதோடு நிற்காமல் மூக்கறையன் கதையாய் நாட்டையே நாசமாக்கி விட்டார்கள். இவ் வுண்மையை அறியாமல் பலர் இப் படுகுழியிலும் விழுந்து பரிதபிக்கிறார்கள்" என்று தற்காலத்திய சில சிறுகூட்டத்தார் கூசாமல் பேசுகிறார்கள். இதைச் சரியென்று சிலர் செவிசாய்த்துக் கேட்கிறார்கள். சிறுவர்களையும் ஸ்திரீகளையும் எளிதில் கலைத்துவிடலாமெனக் கருதி அவர்களிடம் துர் போதனைசெய்துவருகிறார்கள். புத்தி வலிமை இல்லாத சிலரிடம் அந்த போதனை பலித்துவிடுகிறது. இவர்கள்செய்வது முழுவதும் பரமோபகாரமாம். பூர்வீகர்கள் செய்வது பெரும் மோசடியாம். இதென்ன விபரீதம்! பாருங்கள். "அன்னத்துவேஷமும்-பரம்மத்துவேஷமும் அற்பாயுஸ்வின் குறியாம்" என்ற நியாயப்படி பிரபஞ்சத்தில் தற்போது பாலாரிஷ்டம் பரவிவிட்டது எல்லோருக்கும் தெரிந்ததே. தீர்க்காயுஸ்ஸாய் நீடூழிவாழவேண்டுமானால் பிரம்மத்துவேஷத்தை ஒழித்து பூர்வீகர்கள் சொற்படி நடப்பதே நன்று. நம்முன்னோர்கள் கலியுகக்குலக் கோடரிகளின் அவதாரத்தையும், அவர்களது அடாத செயல்களையு மறியாமல், எழுதிவைக்காமலுமில்லை. அதையுணர்ந்து யாவரும் இவர்களது துர்போதனையில் புராமல் பூர்வீகர்களையே பின்பற்றிப்புண்ணியத்தையே நாடி புருஷார்த்தம் பெருவாராக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-௵ ஐப்பசிமீ க௫௳

# ஸஜ்ஜனங்களின்சேர்க்கையேசிறந்தது

பிரபஞ்சத்தில் பற்பல ஸ்வபாவமுடைய பல ஜனங்களிருந்தாலும் ஸம்ஸாரிகள் ஸஜ்ஜனங்களோடு ஸஹவாஸம் செய்வதே சிறந்ததாகும். எவருடனும்—எவ்விதத்திலும் சேர்க்கை வைத்துக்கொள்ளக்கூடாது. அதை அடியோடு விடுவதே நலமென்று சிலவிடத்திலுபதேசித்திருப்பது அந்தக்கரணத்தை அடக்குந் திறமைவாய்ந்தவர்களைப் பற்றியதாகும். அப்படியில்லாதவர்களுக்கு ஸாதுக்களின் ஸஹவாஸந்தான் சிறந்தது. இக்கருத்தை பெரியோர்கள்—

संगः सर्वात्मना त्याज्यः त्यक्तुं यदि न शक्यते ।
सद्भिरेव स कार्यो वै सत्संगो ह्यस्य भेषजम् ॥

“எவ்விதத்திலும் ஸங்கத்தைத் தள்ளுவதே நன்று. அப்படி அதைத்தள்ளமுடியாவிடில் அதை ஸாதுக்களோடுதான் செய்ய வேண்டும். ஸம்ஸாரிகளுக்கு ஸாதுக்களின் ஸங்கம் நல்லமருந்தல்லவா?” என்று பிரகாசப்படுத்தியிருக்கிறார்கள். இது யுக்தமே. நோயாளிக்கு வியாதிவிலகி ஆரோக்கியமே அடையத்தக்கதாயினும் கண்டவைத்தியனிடம் கையைக்காட்டி அவன் கொடுப்பதையெல்லாம் சரியான ஔஷதமென்று வாங்கித்தின்று விடக்கூடாது. கலிகாலத்து வைத்தியர்களில் பலர் காலனுடைய கிங்கரர்களாம். அவர்களுக்குக்காசேபெரிதன்றி பிராணிகளின் பிராணன் பெரிதல்ல. காசைக்கைப்பற்றிக்கொண்டு வேகாதவீரத்தையும் பூரத்தையும்வைத்து வாயும் வயிறும் வெந்து போகும்படிசெய்துவிட்டுச் சென்றவிடம் தெரியாமலே போய் விடுவார்கள். அவர்களிடம் சரீரத்தைக்காட்டிக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. ஆனால் சரியானமுறையில் வைத்தியநூலைக் கற்று, வியாதிகளின் நிதானம் (ஹேது) பூர்வரூபம் (முன்தோணக்

கூடிய குறிகள்) சொரூபம், தக்க ஔஷதம் இவைகளைஅறிந்து கர்மகதியையுங்கவனித்து, பிராணனை பாதுகாக்கவல்லனுள்ள வைத்தியனிடம் காண்பித்து, ஹிதமான ஆஹாரவிஹாராதிகளாலும், சோதன சமன சிகித்ஸைகளாலும் ஆரோக்கியத்தை அடைந்து நீடூழிவாழ்ந்து புனிதமான புறவியைப் பயன்படச் செய்வதே நலமாகும். அதுபோலவே பொதுவாகப் பிராணிகளெல்லோருக்கும் பவப்பிணியை ஒழித்துப் புருஷார்த்தங்களுட் சிறந்ததான மோக்ஷபதவியையடையவேண்டியதே, பிறவிப் பயனுபினும் அதற்காகக்கண்டவரோடு கலந்துகொண்டு அவர் தனக்குத்தோன்றியபடியெல்லாம் சொல்லுவதைக்கேட்டு, அதன்படி நடந்து பிறவியைப் பாழாக்கிக்கொள்வது கூடாது. ஆனால் ஸாதுக்களுக்குச்சொன்ன இலக்ஷணம் பூராவும் ஸம்பூர்ணமாய் விளங்கும் பெரியாரிடமே பழகவேண்டும். அவர்தான் பிராணிகளின் பிரகிருதியை ஞானக்கண்ணுல் கண்டறிந்து அதற்கு தக்க வண்ணம் ஸாதனங்களையுபதேசித்து எவ்வளவு பிறவிகடந்தாலும் அந்தந்தப்பிறவியிலும் பூர்வஜன்ம சுபவாஸனை மாறுமல் மேலுக்குமேல் உயர்ந்த நிலையேகிடைக்கும்படிக்கும், கடைசியாக ஜன்ம ஸாபல்யம் வரும்படிக்கும், செய்யச்சக்தியுள்ளவர். அத்தகைய பெரியார்தான் ஸாது எனப்படுவார். பரிபாகம்பார்த்துப் புண்ணியவழியைக்காட்டி புருஷார்த்தம் கிடைக்கும்படிசெய்ய அவர்தான் சக்தியுள்ளவர். பாக்கியமிழந்த பாபிகளும் காலபலத்தால் உண்மைப்புண்ணியவான்களைப் பழித்துவிட்டுத் தாங்களே பெருந்தனம்படைத்தவர்களென்றுப் புகழ்ந்துகொண்டுபுண்ணிய பூமியான பாதநாட்டைப் பாபத்திற்கிடமாகச் செய்துவிடுகிறுர்கள். உண்மையான ஸாதுக்களும், ஸாதுவேஷம்பூண்ட போலிப் பிராணிகளும் பாமரர்களின் திருஷ்டிக்கு ஒரேவிதமாகப் புலப்படுவார்கள். சிறுவர்களை போலிகள் கோஷ்டிகளில் விடாமல் காப்பது பெரியகாரியமாகும், அப்படிப் பாலர்களைப் பாதுகாக்காவிடில் அவர்கள்மாத்திரம் கெட்டுப்போவதன்னியில் முன்னேழு தலைமுறையும், பின்னேழு தலைமுறையும் பிதுருக்கள் புண்ணிய லோகத்தினின்று நழுவி நாகத்தில் விழும்படியாய் விடுமென்று சாஸ்திரசித்தாந்தம். சாஸ்திரத்தைச் சொன்னுல் சரியான பேச்சல்லவென்று சொல்லுபவர்பேச்சு எப்படி நல்லபேச்சாகுமோ தெரியவில்லை. ஆகையால் ஆஸ்திகர்களான ஆர்யர்கள் ஆர்யச்

சிறுவர்களுக்கு ஸஜ்ஜனங்களின் ஸஹவாஸமே உண்டாகும்படிக்கும், துர்ஜனர்களின் பழக்கம் தூரவிலகும்படிக்கும், வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து இளமைப் பருவத்திலேயே துர்வாஸனையே ருமல் சுபவாஸனைவரும்படிசெய்து பாரதபூமி உண்மையான புண்ணியபூமியாக எப்பொழுதும்போல் இப்பொழுதும்செய்து எல்லோரும் சுகப்படுவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# ஓர் விக்ஞாபனம்.

---

1. விவாகமானபிறகு அக்னிவிச்சின்னமாய்ப்போய்காலாந்தரத்தில் எப்பொழுதேனும் ஔபாஸனம்ஆரம்பித்து ஸ்தாலீபாகம் செய்வதாயிருந்தால் விவாக மந்த்ரப்படனம், ஔபாஸனம். ஆரம்பித்த தினத்திலோ, அல்லது பூர்ணமாஸ ஸ்தாலீபாகம் செய்யும் தினத்திலோ, செய்துகொண்டுவருகிறார்கள். மந்த்ர படனங்களை எந்த தினத்தில் சொன்னாலும், அதில் நமக்கு யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. ஆனால் அக்னிநஷ்ட கிருச்ராசரணத்தைப் போல் மந்த்ர படனங்கள், ஆவச்யகமா? அப்பொழுது கிருச்சிர திரவிய தானங்கள்எதற்காகச்செய்கிறது.ஆவச்யகமானால்அதற்கு ஆதாரம் எங்கே இருக்கிறது, எதுமுதற்கொண்டு எதுவரையில் ஜபிக்கவேண்டும்,

2. பிள்ளையில்லாத ஒரு ஸ்திரீயானவள் புருஷனுக்கு கிருத்யம் செய்யவேண்டும் என்றபோது அன்னியளிடம்தினேதினே தர்ப்பம்கொடுத்து கிருத்யம் செய்யவேண்டுமா அல்லது முதல் நாள்கொடுத்த தர்ப்பமே 11.நாள் கிருத்யம் முடிவுவரைக்கும் செல்லுமா?

3. புல் வாங்கிக்கொண்டு செய்கிறவன் ஞாதியாயிருந்தாலும், ஞாதியல்லாமல் இருந்தாலும், கர்மங்களை முழுவதும் உபவீதமாகவே செய்யலாமா, அல்லது வித்யாசமுண்டா?

4. தர்ப்பம்கொடுத்த கர்மத்துக்கு அதிகாரியான ஸ்திரீயானவள், உதகதானம் ஆரம்பித்தபிறகு 10.நாளுக்குள்ளாகவோ 10.நாள் கிருத்யமானபிறகோ அல்லது 11.நாள் ஆத்யசிரார்த்த

ஸங்கல்பத்துக்கு முன்னதாகவோ பஹிஷ்டையாகிவிட்டால் மேற் கொண்டு கர்மத்தை எப்படிச் செய்வது.

கிருபாஸமுத்திரம்போன்ற குணம்பொருந்திய தர்ம சாஸ்திர அபிக்ஞானான பெரியோர்களை யாம் வணக்கமாய்க் கேட்டுக் கொள்வது யாதெனில் மேலேகண்ட நான்கு சந்தேகங்களுக்கும் மறுபடியும் அவைகளில் ஒரு பிரிவைப்பற்றி எழுதும்படி இல்லா வண்ணம் பெரியோர்களின் ஆசாரத்தையும், வசனத்தையும், நியாய ஸஞ்சாரமும்பண்ணி ஆழ்ந்த யோசனைசெய்து, ஆதார வசனத்துடன் விளக்கமாய் நம் ஆரியதர்மம் மூலமாக பதில் எழுதும்படி பன்முறையும் வணக்கமாய் நமஸ்கரித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

A.S. பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள்
ஆங்கரை லால்குடி.

# புராணவிமர்சம்.

## பார்வதீ கல்லியாணம்.

"பிரும்மசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்,, இந்நான்கு ஆசிரமங்களிலும் புகழ்பெற்றது கிருஹஸ்தாசிரமம். ஏனெனில் கிருஹஸ்தாசிரமியை அண்டி மற்ற பிரும்மசாரி முதலிய மூன்று ஆசிரமிகளும் ஜீவிக்கவேணுமென்று விதி பிறந்திருப்பதே காரணமாம். இம்மூன்று ஆசிரமிகளையும் ஆதரிக்க பாக்கியம்பெற்றது இக் கிரஹஸ்தாசிரமமே. இதிலிருந்து அடையக்கூடிய சுகிருதத்திற்குக் கணக்கேஇல்லையென்பார். இதுபற்றியே வசிஷ்டாதி மஹரிஷிகளும் கிரஹஸ்தாசிரமத்தைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். இக்கிரஹஸ்தாசிரமமானது "விவாஹத்தையே, மூலமாகவுடையது. அந்த விவாஹம் ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தர்மவிதியை அனுசரித்து ஏற்பட்டது. ரிஷிகளின் தர்ம விதிப்படி அநுஷ்டிக்கப்பட்ட விவாஹமே கிருஹஸ்தாசிரமத்திற்கு முக்கியமாகும். அந்த கிருஹஸ்தாசிரமமே மற்ற ஆசிரமிகளுக்கும் ஹிதமளிக்கத்தக்கதும் உலக க்ஷேமகாரமும் மங்களமுமாகும். கிருஹஸ்தா சிரமத்திற்கு மூலமாகிய விவாஹம் விதிப்படி சரியாகவில்லை என்றால் அவரது அன்னஹாரங்களும், மற்றுள்ள ஆசிரமிகளுக்கு அஹிதமாகும். ஏனெனில் பிரும்மசாரி

யாதி ஆசிரமங்கள் மிகவும் பரிசுத்தமும், மோட்சஹேதுவாகவும் கருதப்பட்டிருக்கிறபடியால் அவ்விதமகிமை பெற்ற ஆசிரமிகள் அன்னகாரங்களை மிகவும் சுத்தமாயும், மிதமாயும், ஹிதமாயும் நன்கு சோதித்து கிரகிக்கவேணும். பரிசுத்தா சிரமிகளுக்கு சத்காரம்செய்து மேன்மைபெற விரும்பின கிரகஸ்தன் விதிப்படி விவாஹ முறையையே கையாளவேண்டும். விவாஹ விதிகள் மகரிஷிகளால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதுவே விவாஹத்திற்குச்சட்டமாகும். அந்தச்சட்டத்தை மீறி நடப்பதானல் விவாஹம் சரியாகமாட்டாது. தேவரிஷிகளால் நிந்திக்கத்தக்கதுமாகும். மஹரிஷிகளின் சட்டமே விவாஹத்திற்கு முக்கியமென்றதத்துவத்தை "பரமசிவனும், பார்வதீவிவாஹ" சமயத்தில் நன்கு அநுஷ்டித்துக் காண்பிவித்திருக்கிருர். "பார்வதீ கல்வியாணமே" சகல விவாஹத்திற்கும் முக்கியமென்று இப்பவும் நாம் அதைக் கையாண்டுவருகிறோம். இதற்கு இலட்சியமாக விவாஹமங்களசமயத்தில் சுமங்கிலிஸ்திரீகள் கௌரீகல்யாணம் வைபோகம் என்ற வசனத்தை கானமாகப்பாடுவதும் அதையே பெரியமங்களமாக நாம் எண்ணுவதும் வழக்கம் கௌரீகல்லியாணம்பாடத்தெரியாத ஸ்திரீகளே இருக்கமாட்டார்கள் என்பது உண்மை.

பரமசிவனை சப்தரிஷிகள் விவாஹம் செய்துகொள்ளும்படி வேண்டினசமயத்தில் பகவான்

> विवाहो हि महाभागा न दृष्टो न श्रुतो मया ।
> यथा पुरा भवद्भिस्तद्विधिः प्रोच्यो विशेषतः ॥

ஹே ரிஷிகளே ! என்னல் விவாஹமானது பார்க்கவாவது கேட்கவாவது ஏற்படவில்லை. முற்காலத்தில் விவாஹவிதியானது உங்களால் எவ்விதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அவ்விதம் நீங்களேயிருந்து செய்துவைக்கவேணுமென்று அவர்களிடமே பொறுப்பு வைத்திருக்கிருர். இவ்விஷயத்தில் மஹரிஷிகளின் விதியே முக்யமென பகவத்வாக்கியத்தாலும், பார்வதீ விவாஹ சரித்திரத்தாலும் விளங்கிற்று. தற்காலத்தில் நம்மிடையில் விவாஹவிதியானது சீர்கெட்டுத் தோன்றியபடியெல்லாம் அசாஸ்திரமாக நடைபெறத் துடங்கிவிட்டது. இதில் ஒருநாள் கல்லியாணமென்பது புதுநாகரீக மனிதர்களால் கையாளப்பட்டு வருகிறது.

ரிஷிகளின் விதியோ நான்குநாளாகச் செய்யவேணுமென்று உபதேசிக்கிறது. ரிஷிகளின் விதியைப்புறக்கணித்து ஒருநாளில் நடத்த என்ன பிரமாணமோ அறியோம். நாகரீக மேதாவிகள் நடத்திவரக்கூடிய பல நவீன முறைகளில் இதுவும் ஒன்று என்று தான் சொல்லவேணுமேதவிர இதில் சிறிதும் தர்மமும் நியாய மும் இருப்பதாகத்தெரியவில்லை. கேவலம் லௌகிகத்திற்காக வைதிகாசாரத்தை கொலைசெய்வதானது (செறுப்புக்குத்தக்கபடி காலைவெட்டுவதற்கு) ஒப்பாகவே சொல்லவேண்டும். வைதிகதர்ம தத்துவசாரத்தை அறியாக்குற்றத்தால் எதைச்செய்து தீரவேண் டுமோ, எதை விடவேண்டுமோ, இவைகளை அறியாமல் தோன் றியதைச்செய்தும், சிலவற்றை விட்டு நேர் மாறாக தர்ம்மத்தை சிதறடித்து விடுகிறார்கள். இவ்விதம் இஷ்டப்படிசெய்ய சாஸ் திரமாவது, புராணமாவது, பூர்வாசாரமாவது சிறிதும் இடமளிக் கவில்லை. இவ்விஷயத்திலும் பார்வதி விவாஹமே ஆதாரமாகிறது. பார்வதீ விவாஹம் நடந்த சமயத்தில்

चतुर्थे दिवसे प्राप्ते चतुर्थीकर्मशुद्धितः ।
बभूव विधिवद्येन विना खण्डितएव सः ।

நான்காவது தினத்தில் விதிப்படி சதுர்த்தீ கர்ம்மானது நன்கு முறைப்படி அனுஷ்டிக்கப்படாவிடில் விவாஹம்பூர்த்தியாவதில்லை என்றுநன்கு சதுர்த்திகர்மஞ்செய்ததாக இவ்வசனத்தால் வெளி யாகிறது. ஆனால் இதில் சதுர்த்தீ கர்ம்மத்தை விட்டுவிட்டால் விவாஹம் பூர்த்தியாகாதென்பது உண்மையே, அந்தக்கர்மாவை யும் முதல் தினத்திலேயே செய்துவிட்டால் விவாஹபூர்த்தி என் வாமாட்டாதென்று நவீன சங்கைவரலாம். நான்காவது தினம் வந்தபோது என்று காலத்தைக் குறித்திருப்பதுபற்றி அச்சமயத் திலேயே செய்யவேண்டுமேதவிர எப்பொழுதாவது செய்வ தென்பது கூடாது. ஔடதம் வீரியவிருத்தி பெருவதற்காக 40-நாள் பூமிக்குள் வந்திருக்கவேணுமென்று விதியுண்டு. இந்த 40-நாள் பூமிக்குள்ளிருக்கும் பட்சத்தில் ஔடதம் வீரியவிருத்தி பெருகுமேதவிற அதற்கு வித்தியாஸமாக சில தினங்கள்மாத்திரம் பூமிக்குவைக்கவேணுமென்ற நியாயப்படி செய்துவிட்டதாக சொல்லும் பட்சத்தில் ஔடதம் வீரியம்பெறமாட்டாது என்று மட்டுமல்ல ரோகசாந்திக்கும் உதவாமல் வீணாகும்.

कालप्रयुक्तं कार्यञ्च सिद्धिं प्राप्नोति नान्यथा ॥

இவ்வாக்கியத்தால் காலத்தினுல் மகிமைபெறக்கூடிய காரியங்கள் காலம்வாராதவரை மகிமைபெறமாட்டாது என்று விளங்குகிறது. இது லௌகிகத்திலும் பல வழிகளாகக்காணலாம். பத்து மாத மாக கர்ப்பத்திலிருக்க காலநியமம்பெற்ற கர்ப்பத்தைநமதுசௌ கரியத்திற்காக எட்டாவதுமாதத்தில்பிரஸவிக்கச்செய்தால் அந்த கெற்பம் எதற்கு உதவும்? அதுபோலவே மா, தென்னை, வாழை, பலா முதலிய காய்களும் அதன்கால அளவுவரை நன்கு முற்றி பிறகு பழுப்பதே உபயோகத்திற்கு உதவும் என்பதுபோல காலத்தில் விதிக்கப்பட்ட நான்காவதுநாள் செய்யவேண்டிய கர்ம்மத்தை முதல் நாளில் செய்துமுடிப்பதானது விவாஹபூர்த் திக்குக் காரணமாகமாட்டாதென்பது நிச்சயம்.

சாஸ்திராநுஷ்டாநுஷிகாமானது மனிதனுக்கே ஏற்பட் டது. அதைப் புத்திபூர்வமாகவோ அல்லது தவறுதலாகவோ செய்வதால் செய்ததற்கு பலனுண்டாவது நிச்சயம். நாம் யதிர்ச் சையாய் தெய்வாதீனமாய் செய்கிற புண்ணியகர்மங்களினுலேயே இப்போது இவ்விதம் ஜீவித்துவருகிறோம். பசிக்கு போஜனம் செய்ய சாஸ்திரம் தேவையில்லை. சாஸ்திரம் சொல்லாவிடினும் நாம் சாப்பிடுவோம், ஸ்நானஞ்செய் என்று சாஸ்திரம் சொல்கி றது அதனுல் நமக்கு சுத்தமும் வருகிறது. அத்துடன் புண் ணியமென்ற அதிருஷ்டபலன் ஒன்று கூடவருகிறது. நமது உத்தேசம் ஒன்றாகமட்டுமிருந்தாலும் தானாகவே இரண்டு பலன் வருவதைத்தள்ளவேண்டாமன்றோ? அதுபோலவே மஹரிஷிக ளின் நியமப்படி விவாஹாதி ஸம்ஸ்காரங்களில் இகலோக சுகமும் அதனுல் தேவரிஷி பிதுரு திருப்தியும் கிரஹஸ்த தர்ம்ம பிராப்தி யும், அதினின்று மனசு சுத்தியும், அவ்வழியாக ஞானமும், மோட்சமும் வருகிறது. இந்த 'விவாஹ விதியால்' அநேகம் குணங்கள்வந்து சேருமானுல் யார்தான் இதை அனுசரிக்க மாட்டார்கள்.

நமது மகரிஷிகளினுல் அனுஷ்டிக்கப்பட்டு மேன்மைபொரு ந்திவிளங்கும் ஸநாதனதர்மமார்க்கத்தை தற்காலத்திற்கு இசை யாதது என்றும் அதனை விலக்கவேண்டியதுதான் என்றும்

அதனை விலக்கவேண்டியதுதான் என்றும் தற்காலம் பிறந்திருக்கும் நவீன வாதமானது தர்ம்ம மகிமையை அறியாத பெரும் குற்றத்தால் ஏற்பட்டதென்று உறுதியாகச் சொல்லலாம். "அறியாக்குற்றம் ஆபத்தாகும்" என்பது நிச்சயம்.

உதாரணமாக:—ஒரு மனிதனுக்கு காலில் ஓர் சிலந்தி விஷத்தால் சொறிவொன்று தொடங்கிற்று. ஆனல் இவனுக்கு இங்கிலீஷ் வைத்தியத்தில் மோகமுண்டு. டாக்டர் ஒருவரிடம் காண்பித்தபோது இது மிகக்கொடிய விஷவியாதி, இப்பொழுதே முட்டுவரைக்கண்டித்துவிட்டால் நலமாகும். இல்லாவிட்டால் பிராணனுக்குக் கெடுதலாக வந்துவிடும் என்றுன். அவன் பிராணனில் ஆசைகொண்டு முட்டுவரை கால் போனலும் போகட்டுமென்று ஆப்பிரேஷனுக்கு சம்மதித்தான். அவ்விதமே கண்டிக்கப்பட்டு புண்ணும் ஆறிவிட்டது.

சிறிது காலம் சென்றதும் அதே வியாதி கையில் காணப்பட்டது. அப்பொழுதும் முன்போலவே ஆப்ரேஷன்செய்து புண் ஆறிவிட்டது. சுருங்கச்சொல்லுமிடத்து இவ்வியாதியானது, காது, மூக்கு, மார்பு, முதலிய ஸ்தானங்களில் பிரவேசிக்கத்துடங்கிற்று. இதைக்கண்ட டாக்டர், திகைத்து தந்திரமாக ஓர் யுக்திசெய்தார். அப்பா! உன்வியாதி கண்டிக்க முடியாத விடங்களில் வந்திருப்பதால் நாட்டு வைத்தியரிடம் சென்று ஏதாவது பற்றுக்குமறுந்து தடவியோ, அல்லது வேறு எவ்வழியாகவாவது சரிசெய்துகொள் என்று அனுப்பிவிட்டார். ரோகி அவ்விதமே நாட்டுவைத்தியனிடம் சென்று ஒரு பூச்சு மறுந்துதடவி மிக சீக்கிரத்தில் வியாதி குணம்பெறவே தனக்கு முன் வைத்தியம் செய்தவரிடம்வந்து, சுவாமீ! தாங்கள் என்னை முந்தியே இந்த நாட்டுவைத்தியரிடம், போகும்படி சொல்லி இருந்தால் நான் அங்கஹீனமடையாமல் இருந்து இருப்பேன். அறியாமல் கெட்டேன் என்று மனவருத்தப்பட்டான், இவ்வருத்தத்திற்கு முக்கியகாரணம் " வீண் டம்பாசார மோகமே" யாகுமென்பதில் ஐயமில்லை. இதுபோலவே நமது மஹரிஷிகளின் விதிகளானவைகள் எக்காலத்திலும்சுகத்திற்கு முக்கியகாரணமாக இருக்க இதை இக்காலத்திற்கு உதவாதென்றுநிராகரிப்பதானது, பச்சாத்தாபத்துக்கே காரணமென்பது அநுபவசித்தம். லௌகீக மேதாவிகளுக்கு ரிஷிகளின் முறையை வேண்டாமென்று தற்

காலம் சொல்லமுடியுமே தவிர, அவர்களது முறைப்படி உண்டாகும் குணங்களை வ்ருத்திக்கொடுக்க ஒருபோதும் இயலாது. ஆனால் இவர்களின் வார்த்தையானது எம்மட்டில் உபயோகமாகுமென்பது வாசகர்கள் அறிந்துகொள்வார்களாக. இதுவரையில் சொல்லி வந்ததிலிருந்து தர்மம் மனிதனை பலவழிகளாக பந்தித்திருப்பது நிச்சயம். எவ்வாறெனில்,

ग्रामधर्मा जातिधर्मा देशधर्माः कुलोद्भवाः ।
परिग्राह्या नृभिस्सर्वैं नैव तां लंखयेन्मुने ॥

இந்த வசனப்படி கிராமதர்ம்மம், சாதிதர்மம், குலதர்ம்மம், தேசதர்ம்மம், இவைகள் மனிதர்களால் அநுசரிக்கத் தக்கவைகள் என்றுமாத்திரமல்ல அதைவிட்டு நடக்கவும் கூடாதவைகளென்றும் உறுதியாகிறது, நேயர்காள்! இதிலிருந்து கிராமஜாதி தேசகுலதர்மப்படிக்கும் மஹிமையான 'ரிஷிகளின் விவாஹவிதிப்படிக்கும் நான்கு நாளாகவே விவாஹம் நடத்தவேணுமென்பது சித்தமாகிறதும் தவிர ஒருநாளில் செய்துமுடிக்கச் சிறிதும் சாஸ்திரம் இடமளிக்கவில்லை என்பதும் சித்தமாகிறது. ஆனால் சாஸ்த்திரமார்க்கத்தை விடாமலும், இக்கால முட்டிடைகளுக்கு இசைந்தும் விவாஹத்தைநடத்த வழி எங்ஙனமென்று விவேகிகள் சற்று கவனிக்குமளவில் தக்கவிதமாக மஹிமையானவழியொன்று தென்படாமலிருக்கமாட்டாது. 'அதாவது முதல்நாளில் விவாஹத்தில் லௌகிகங்கள் யாவையும்செய்து முடித்துக்கொண்டு, பந்துக்களை யாத்திரைசொல்லியனுப்பிவிட்டு "வதூவார்கள்" மாத்திரம் ஔபாசனத்தை தினமும் நடத்திவந்து நாலாவது தினத்தில் விதிப்படி விவாஹ சேஷஹோமத்தை நடத்தி முன்னோர்களான ரிஷிகளையும், தேச, குல, சாதி, தர்ம்மங்களையும் ஆதரித்து அபரிமிதமஹிமைபெற யாதொரு தடையுமில்லை என்பதுதான் தற்காலத்திற்கு மகிமைபெறும் வழியாகும். இல்லாவிடில் சாஸ்திரமார்க்கத்தை விட்ட குற்றமும், அநாசாரத்தை ஆதரித்த குற்றமும் சேர்ந்து, மனிதனை அவதிப்படுத்துவது நிச்சயம். இதற்கு ராவணன்சரித்திரம் முக்கிய ஆதாரமாகும். $3\frac{1}{2}$-க்கோடிவருடம் ஜீவிக்க வரம் பெற்றிருந்த ராவணன் அதர்ம்மத்தின் கொடுமையால் $\frac{1}{2}$-கோடி வருடமே ஜீவித்திருந்தானென்று சரித்திரத்தால் விளங்குவதிலிருந்து அதர்மம் எவ்வு

ளவு ஆபத்தைக் கொடுக்கிறதென்பதைப் பாருங்கள். ஆகையால் வைதிகமாக விவாஹவிதிகளை நான்குநாளாக முன்வறைந்தபடி "பார்வதீகல்லியாணமாக"ச்செய்து பகவத் அநுக்கிரகத்தால் பரமானந்தம்பெற்று விளங்குவோமாக. சுபம்.

S சங்கரருமசர்மா. கொட்டாறக்கரை.

---

## மதமும், மார்க்கமும்.

---

ஸ்ரீயுத காந்தி வக்கீல்களுக்கு வேலைக்கு போகாதீர்களென்று முன் உபதேசித்துப்பார்த்தார். அதையாதரிப்பாரில்லை. பிறகு அவ்வழி சரியில்லையென்று கண்டு சாரதாசட்டத்திற்கு அடங்கி நடக்கும்படி ஜனங்களைத் தூண்டினாலும் போதும் என்று அழைக்கிறார்என்று பத்திரிகையில் பார்த்தோம். சுவாதந்திரிய உத்தியோகஸ்தர்களான வக்கீல்களை மதத்தைக்கெடுக்கவர்வது சகாயம் செய்யுங்களென்று வேண்டிக் கொள்ளுமிவர் எவ்விதமதப் பற்றுள்ளவரென்பது சொல்லாமலே அறியப்படுகிறது. சாஸ்திரமானது நிபந்தனைக்குள்பட்ட அறிவைமாத்திரமே விவரிக்கிறது என்பதை ஜனங்கள் பார்க்கிறதில்லை.நிபந்தனையற்ற பூமியிலிருந்து அஃது எவ்வித சமாசாரமும் கொண்டுவருவதில்லை. பழைய காலத்து ரிஷிகளைப்போன்று ஈசுவரனை நேராக தரிசித்து அநுபவத்தில் தர்ம்மரகசியத்தை அறிந்த பரிசுத்த புருஷர்களால் அத்தகைய சமாசாரம் கொண்டுவறப்பட்டிருக்கிறது. ஈசுவரன் இத்தன்மையுள்ளவரென்று கூறுவதற்கு ரிஷிகளே தகுதியானவர்கள். இவர்கள் நியமித்திருப்பதே மதக்கிரந்தங்களாகும். மதமானது மனிதனுக்கு பலகாரணங்களாலுண்டாகும் அசக்தையை விலக்கக்கூடிய ஓர் மார்க்கமாகும். மதக்கிரந்தங்கள் அம்மார்க்க சஞ்சாரத்திற்கு வேண்டிய சாதனங்களுடைய ஓர் ஜாபிதாவாகும், புராணங்கள் சாஸ்திரங்களுடைய யதார்த்த தத்துவத்தை சம்சய கலுஷமனமுள்ள மனித ஹிருதயத்தில் விசுவாசத்தைத் திடப்படுத்தியமைக்கவல்ல ஓர் சாதனமாம். இவ்வித மார்க்கங்களில் சென்று அநுபவப்படுத்தினவருடைய சரித்திரங்களும், ஓர் முக்கியசாதனமாம்.

மனிதனே அசக்தன் ஆனல் சக்தனுமாவான். சர்வசக்தி பிராப்திக்கும் அதிகாரியுமாவான். இந்த விசுவாசமான எண்ணம் மனிதனுக்கு எவ்வளவுகாலம் வரை ஹிருதயத்திலிருக்கிறதோ, அக்காலம்வரை மதமும் புராணுதிமதக்கிரந்தங்களும், அத்தியா வசியமாகும், ஆனல் தற்காலத்திய ஸ்ரீயுதகாந்திபோன்ற மேதாவி கள் வேத, சாஸ்திர புராணுதிகள், கட்டுக்கதைகளென முடிவு செய்துகொண்டு தனது புத்தியில் தோன்றுவதெல்லாம், சாஸ்திர மென்று தனது இஷ்டப்படி தாராளமாய் 'தர்ம நாசம்செய்ய தலைவரென்று மகிமைபெற்று தயாராக இருக்கிறார்கள். பெருங் குரங்கு தனது கை சுடுமென்று தன்குட்டியின்கையைக்கொண்டு கிண்டுவதுபோல தர்மநாசத்துக்கு வக்கீல்களை இவர்வேண்டிக் கொள்கிறார். ஆனல் பகுத்தறிவு ஈசனுல் நன்கு கொடுக்கப் பட்டிருக்கிறது, அதைச்சமயத்தில் உபயோகித்துவரவேண்டியது மனிதனின் கடமை.

மனிதன் ஒவ்வொருவனும் அன்னியனிடமிருந்து ரூபாயை வாங்கிக்கொள்ளும்போது நல்ல சத்தமுள்ளதுதானுவென்று அதைக் கல்லின்மீதோ, அல்லது நகத்தின்மேல்வைத்தோதட்டிப் பார்த்து நல்ல சத்தமுள்ளதை கிரகித்து சப்தக்குறைவுள்ளதை நீக்கிவிடுவது சர்வதேச வழக்கமாம். அதுபோலவே மனிதனின் முகத்திலிருந்து வெளிவரும் வசனகோடிகளையும், அதன் குண குணங்களையும், சீர்தூக்கி அறிகிற விவேகிகள் மிக சோதனை செய்து பிரயோஜனமுள்ளவைகளை அங்கிகரித்தும், அதற்கெதி ரிடையாயுள்ளதை தள்ளியும் விடுவார்கள் என்பது நிச்சயம்' இவர் வக்கீல்களை வேண்டிக்கொள்கிருரே, அவர்கள் புத்தியில்லா தவர்களா, இவர்தான் புத்தியில் பிருஹஸ்பதியா, இவர்கள் ஒவ் வொருவாக்கையும் அளந்துபாருமல் ஒப்பிவிடுவார்களா? காந்தி சொல்வதெல்லாம் காரியமாகுமா, ஆனலோ இவர் தெய்வமாய் விடுவாரே, இதனல் காந்தியின் வசனங்களெல்லாம் காரியமாகா. மனிதனின் மகிமையானது நட்சத்திரத்தின் ஒளிபோலவாம். இரவில் ஆகாயவீதியில் அநேக நட்சத்திரங்களைப் பார்க்கிறோம். ஆனல் சூரியோதயகாலத்திலதைப் பார்ப்பதில்லை, இக்காரணத் தால் பகற்காலத்தில் நட்சத்திரமில்லையென்று சொல்லிவிடலாமா, ஒருவனது அஞ்ஞான அந்தகார இருளில் ஈசனைப்பார்க்க முடியாத காரணத்தால் ஈசனில்லை என்று சொல்லிவிடலாமா

மனிதனுக்கு ஜனநாயகத்தில் ஓர் நேத்ருத்வமிருப்பதாகவெண்ணி ஈசனது ஆஞ்ஞாரூபமாகிய தர்மசாஸ்திரங்களைப் புறக்கணித்து விடலாமா? நட்சத்திரங்கள் சூரியோதயத்தில் மழுங்கிவிடுவது போல ஜனநாயகாதி கியாதியும் ஒருகாலத்தில் மங்கிப்போய்விடா தென்று உறுதியாய் சொல்லமுடியுமா.

தற்காலத்தில் ஈசுவரஞானம், புத்தகம்படித்ததால் தான் அடையவேண்டும். மற்ற எவ்வழியாலுமடைய முடியாதென்று நவீனமேதாவிகள் நினைக்கிறார்கள். சாஸ்திரங்களைவாசிப்பதைவிட கேட்பது உத்தமம். அதிலும் அனுபவமே மிகச்சிறந்தது. கிரந்தங்களின் வீண் படிப்பைவிட சாஸ்திர சிரவணம் குரு மூல மாய் செய்வது சிறந்தது. அதிலும் பிரத்தியட்சதரிசனமே மனதில் நன்றாய்ப்பதிய முக்கியமாம்.

காசிமாநகரத்தைப்பற்றிப் படிப்பதைவிடச் சென்று நேரில் பார்த்தவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்வது மேலாகும். அதாலும் தன் கண்ணால் நேராகக்காண்பதே மிகவும் சிறந்தது. இவ்வழிகளில் ஏதாவதொன்று தர்மசாஸ்திர விஷயத்தில் காந்தி யிடமிருப்பதாகச்சொல்ல இடமில்லை. லௌகிக ஞானசாமர்த்தி யத்தால் ஜனநாயகஸ்தானம் வந்திருப்பதால், எதுவும் செய்து விடலாமென்று எண்ணுகிறார் போலும், இந்த எண்ணம் ஈச னருள் பொருந்திய தர்மமார்க்கத்தால் பயன்பட மாட்டா தென்பதும் மட்டுமல்ல, அனேக ஆபத்துக்கு காரணமாகும்.

உண்மையான வித்தை உள்ளவனிடம் லோகநிந்தையான துர்குணம் காண்பதரிது. சுத்தநீருள்ள பெரியகுளத்தில் கோரைப்புல் வளர்வதில்லை. ஆனால் அல்பஜலமுள்ளதும்சிறியளவும் நீரோட்டமில்லாததும் பாசி பிடித்ததுமாகிய குட்டைகளில்தான் வளர்கிறது. அதுபோல சுத்தமானவையும், ஸ்வயநலமற்றவையு மான விரிந்த நோக்கமுள்ளவர்களிடத்தில், தர்மத்துவேஷம் ஏற்படமாட்டாது. சுவயநன்மை பிடிவாதம் முதலிய குணங் களையுடையவர்களிடத்தில்தான் தர்மவேற்றுமை ஏற்படும்.

ஈசனால் செய்யப்பட்ட வரம்பைப்பழித்தவர்களில் ஒருவரா வது சுகம்பெற்றவர்களில்லை, பகவான் பாண்டவதூதுக்காக வந்தகாலத்தில் துரியோதனனை பலவழியாகத்தேற்றினர். அவன்

அக்காலத்தில் பகவானென்று சிறிதும் மதியாமல் சாமானிய
தூதனென்று கருதி, அவனைக்கட்டியடிக்க எத்தனித்தான்.
இந்த அதர்ம்மகாரியத்தால், மகாயுத்தம்துடங்கி மானமிழந்தான்.
ஹிரண்ணியன் என்ற அசுரன் தன்னையே ஈசனாகபாவிக்க வேணு
மென்றும் வேறு ஈசனொருவனில்லை என்றும் சகலமகிமையும் தன்
கைவசம் இருப்பதாகவும், தர்ம விருத்தமாக ஜனங்களைக் கட்டா
யத்தில் ஆசரிக்கச்செய்துவந்தான். ஈசனது ஆஞ்ஞாரூபமான
தர்ம்மங்களை பேதித்து அனீததர்மங்களை ஆசரிக்கச் செய்துவந்த
தோஷத்தால் மகிமையற்றுமாண்டான். வேனன் என்ற ராஜனும்
தன் ராஜ்ஜிய ஜனங்கள் அன்னியனை ஒருகாரியத்திற்கும்
அபேட்சிக்கக் கூடாதென்றும், தானே சர்வேசுரன் என்னிட
மிருந்து வேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம், எனக்கு மேலாக
ஒருவருமில்லை என்றும், ஜனங்களைப்புதிதானரீதியில் சீர்திருத்தி
ஆண்டுவந்தான். ஈசனது பழைய நீதிநியமங்களை மதியாமல்
அழித்துவிட்டு தன்சக்தியே பலமென்றெண்ணி ஆண்டுவந்த
காலத்தில் ரிஷி சாபரூபமான அதர்மத்தின் கொடுமையானது
அவனை அழித்துவிட்டது. கம்ஸனும் இவ்விதமே அதர்மாதிக்
கியத்தால் அழிந்தான். இம்மாதிரியான புராணசரித்திரங்கள்
ஈசநியம வரம்பைக்கடந்து நடக்கக்கூடாதென உபதேசித்து
நிற்கின்றன.

அவரவர்களுக்கு ஏற்பட்ட குலதர்மத்தைச் சரியாய் அனுஷ்
டித்துவருவது ஒருவித ஈசுவராராதனமாகும். ஏனெனில் ஈசன்
வகுத்திருக்கும் மார்க்கத்தை அனுஸரிப்பதாலாம். இதில் நவ
நாகரீகத்தைக் கருதிச்சிலவற்றை விலக்கி சிலவற்றை ஒப்புக்
கொள்ள மனிதனுக்கு நியாயமில்லை. நியமங்களை பேதப்படுத்
தவோ, மாற்றிவைக்கவோ, ஈசனுக்குத்தான் அதிகாரமுண்டு.
உதாரணமாக, ஒரு தனிகன் தனது தோட்டத்தை இரட்சித்து
வர, ஒருவேலைக்காரனை நியமித்ததாக வைத்துக்கொள்ளுவோம்.
இவ்வேலைக்காரனுக்கு, அத்தோட்டத்திலுள்ள வஸ்துக்களை
வேண்டியபடி இரட்சித்துவருவதற்குமாத்திரம் அதிகாரமுண்டு.
அத்தோட்டத்திலுள்ள வஸ்துக்களை அவன் தன்னுடையதாகச்
சிறிதும் எண்ண நியாயமில்லை. தோட்டக்காரனுக்கு அதிலுள்ள
வஸ்துக்களை வித்தியாஸப்படுத்தவோ, நசிக்கச்செய்யவோசெய்ய
பாத்தியதையுண்டு. அதில் வேலைக்காரனுக்கு சிறிதளவாகிலும்,

மனவருத்தமோ, தாபமோ உண்டாவதில்லை. அதுபோலவே இந்த லோகம் ஈசனுடைய ஓர் தோட்டமாகும். அதில் நம் போலுள்ளவர்கள் அதை நன்குஆட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட வேலைக்காரனுவோம். ஆனதால் இதில் சில தர்மங்களை கூட்டிக் குறைக்க நமக்கவகாசமில்லை. ஈசனை மதியாமல் மாற்றத்தலைப்படுவதானுல் யஜமானனைத்து ரோகிப்பதற்கு ஒப்பாகும். தன்னை துரோகிப்பதாக அறிந்த யஜமானன் வேலைக்காரனை சிட்சிப்பதும் விலக்கிவிடுவதும் நிச்சியம் என்பதுபோல பகவானும், அவரது வரம்பை வெட்டி முறித்து கண்டபடி நடப்பவர்களை பலவழியாக சிட்சித்தும் பெருமையான பதவிகளிலிருந்து கீழில் தள்ளியும் வைப்பார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. மனிதனின் மகிமைக்கு ஈசனே முக்கியகாரணம். ஆகையால் விவேக ஞானிகள் ஈசாஞ்ஞாரூபமான வர்ணுசிரமதர்ம மரியாதையைப் பேதப் படுத்தி நடந்துசுகம்பெற சுவப்பனத்திலும் நினைக்கமாட்டார்கள்,

वर्णानामाश्रमाणां च या मर्यादा मया कृता ।

வர்ணுசிரமங்களுக்கு மரியாதை என்னுல் செய்யப்பட்டிருக்கிறது. அதை விலகி நடப்பவன் ஒருவித சித்தியையும், சுகத்தையும் பெறமாட்டான் என்று ஈசன் உருதியாய் உபதேசித்திருப்பதால் தர்ம நியமத்தில் தலைபோடாமலிருப்பது தக்கதோர் உபாயமாகுமென்று தன்மதிப்புள்ள மகான்கள் தாராளமாய்க் கைக்கொள்வாராக. சுபம்,

எஸ். சங்கராாமசர்மா,
கொட்டாரக்கரை.

---

# வ று மை.

---

உலகில் மஹாகவி காளிதாசன் கூறுவனவெல்லாம் அனுபவித்தறியப்பட்டு உலகினியல்பைச் சார்ந்தே யொழுகுகின்றன. காளிதாசனது வாக்கு ஒருஇடத்திலும் மழுங்கினதேகிடையாது! ஆனுல் ஒரே ஒருஇடத்தில் மழுங்கிப்போயிற்று, அந்தஇடந்தான் "வறுமை,, என்பதாகும்,

காளிதாஸ கவியானவர் குமாரசம்பவத்தில் இமயமலையை வருணிக்குங்கால் அநேக இரத்தினங்களுக்கு இருப்பிடமாகிய இந்த இமயமலையில் பனிக்கட்டிகள் இருப்பதானது அதனது அழகைக் குறைக்கவில்லை. அதுவொரு குற்றமுமாகாது. எப்படி எனில் சந்திரனிடம் களங்கமிருந்தபோதிலும் எப்படி அக்களங்கமானது அவனது குணங்களால் மறைக்கப்பட்டு விடுகின்றதோ, அஃதேபோல் அநேக குணங்கள் நிரம்பிய இடத்தில் ஓர் குற்றம் இருந்தால் அது குணங்களுடைய கூட்டங்களில் மறைந்து விடுகின்றது என்று பொருள்படக்கூடிய

अनन्तरत्नप्रभवस्य यस्य हिमं न सौभाग्यविलोपि जातम् ।
एको हि दोषो गुणसंनिपाते निमज्जतीन्दोः किरणेष्विवाङ्कः ॥

என்னும் ச்லோகத்தை உலகத்தை ஒட்டியே கூறினர்.

எவ்வளவு கெட்டிக்காரராயிருந்து இராஜப்ரதிநிதி உத்யோகம்வகித்து புரட்சியை சமாதானப்படுத்த ஒப்பந்தம்பேசியபோதிலும் "லார்டுஇர்வி"னுக்கு ஒருகைநொண்டிதானே என்றால் அச்சிறுகுற்றமானது அவரது அபார சாமர்த்தியத்தில் மறைந்துவிடுவது உலகத்தினியல்பு.

ஆனாலொன்று உலகினில் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தபோழ்தினும் 'வறுமை' என்னும் ஒரு குற்றம் இருக்குமாயின் அதுவே எல்லா நற்குணங்களையும் நாசமாக்கும்.

இதைத்தான்—

एको हि दोषो गुणसंनिपाते निमज्जतीत्येवमभाषि येन ।
न तेन दृष्टं कविना समस्तं दारिद्र्यदोषो गुणराशिनाशी ॥

என்று ஒருவர் கூறுகின்றார். இந்த இடத்தில்தான் நமது காளிதாசனது நாவன்மை தடங்கலுற்றது.

நமது இந்தியாவிலோ இப்பொழுது எங்கு பார்த்தாலும் வறுமை, பஞ்சம், பிணி, சிக்கனக்கமிட்டி, இவைகளே நிரம்பி இருக்கின்றன. நாம் நமது ஆசாரங்களை சரியானபடி கடைப்பிடித்தொழுகவேண்டுமாயின் நமது வறுமை நீங்கவேண்டும். வறுமைநீங்கினால்தான் நமது முன்னோரது ஆசாரங்களின்வாஸனையாவது காற்றடிக்கும்பொழுது சிறிது வெளியில் பரவும்.

இன்னும் ஒருவனுக்கு காமாலே என்னும் ரோகம் உண்டா னல் மஞ்சள்நிறமானது அவனது கண்களில் மாத்திரமல்லா மல் அவன் நோக்கும் எல்லா பதார்த்தங்களிலும் விளங்கு கின்றது. அதேபோல் நமக்கு துராசாரம் என்னும் ரோகம் உண்டாகிய சமயத்தில் இந்த வறுமையானது தனதான்யங் களில்மட்டுமல்லாமல் நமது முன்னோர்களது நல்ல ஆசாரங்களே யும்பற்றி விட்டது.

ஆசாரமில்லாவிடில் நமக்கு எப்படி புருஷார்த்தம் சித்திக்கும். பகவானும் आचार प्रभवो धर्मः என்றல்லவா கூறுகின்ருர். ஆத லால், இந்த வறுமை என்னும் அரக்கன் ஒழிய வழிதேடி முன் னோர்களது நல்ல ஆசாரங்களே வளர்ப்போமாக.

வேதநெறி தழைத்தோங்க.

ஏ. ஆர். மலேயப்பன்,
ஆங்கரை.

---

# ஸம்ஸாரவர்ணனம்.

முப்புரமெரித்த முக்கண்ணன் முன்னொருகாலத்தில் முனிவர் களுக்கு முக்தியுபாயத்தை உபதேசித்து அருளினரென்பதைக் கேட்ட மஹரிஷிகள்--மோக்ஷோபாயமாகிய ஞானம் எப் பொழுது எவ்விடத்தில் எவர்களுக்கு உபதேசிக்கப்பட்டது என்ற வாலாற்றை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என அகஸ்தியமா முனியிடம் வினவ அவர்சொல்லுகின்ருர்—துவைதப்பிரபஞ்சம் தடித்தோங்கியதால் தன்னிலேதவறித் தீனர்களாகி பிராணிகள் தபித்துகொண்டிருக்குந்தருணத்தில் கருணேகொண்ட ஸநகாதி மஹரிஷிகள் கைலயங்கிரிசென்று அங்கோர் கொடிமுடியில் பார் வதீதேவியுடன் பரமோல்லாஸமாய் வீற்றிருக்கும் தேவதேவனை மஹாதேவனது திருவடிகளில் திருமுடி புரளப்பணிந்து சிரமேல் இருகாங்கூப்பி ஓ! தேவ தேவ !! தயாஸிந்தோ !! துவேஷங் கொண்ட தக்ஷருடைய யாகத்தை துவம்ஸம்செய்து கர்வத்தை யடக்கிய கடவுளே! ஞானயோகத்தால் அக்ஞானமொழிய

அதன்மூலமாகத்தோன்றிய பிரபஞ்சமனைத்து மடியோடழிந்தால் பாரமார்த்திகமான சுயஞ்சோதிச்சுடராகிய தாமொருவராகவேஆகி வியவஹாரதசையில் வேறுபட்டுத்தோன்றுமாத்துமாக்களனைத்தும் அத்வைதானந்த ரூபிகளாவார்களென்றும், அந்தஞானம் வேதாந்தவிசாரத்தால் கிடைக்குமென்றும் கேட்டு ஸகலவேதாந்தங்களும் சிரவணம் செய்யப்பட்டன. துவைதப் பிரபஞ்சமோ தொலையவில்லை. இது விரோதமல்லவா? விரோதம் வாராதபடி உபதேசித்தருளவேண்டும், தேவரீரது திருவடியைத் தரித்தபிறகும் துவைதம் தென்பட்டு சம்சயமுண்டாகுமானால் காமனைக்கண்ணாலெரித்துக் காலனைக்காலாலுதைத்த தேவரீரைத் தவிர வேறெவரைச் சரணமடையப்போகிறோம். இந்த திருச்யமான துவைதப் பிரபஞ்சம் எப்படியிருந்தது? எவ்விதமுண்டாயிற்று? எவ்விதமொடுங்கிற்று? இதையெல்லாம் சொல்லவேண்டும். தேவரீர் திருவாய்மலர்ந்துபதேசித்தால் ஸர்வஸம்சயங்களும் விலகிவிடும்" என்று வேண்டிக்கொண்டார்கள். இவ்வாறு ப்ரார்த்திக்கப்பட்ட அம்புலிசூடிய பரமேசுவரனும் சொல்லத்தொடங்கினார். ஓ ஸனகாதிகளே ஞானயோகம் தங்களனுபவத்திற்கு வரும்படி உபதேசிக்கிறேன். ஸாவதானமாகக்கேளுங்கள். ஸ்தூல திருஷ்டிகளுக்கு எவ்வளவுசொன்னாலும் தெரியாது. உண்மையிலொரே பிரும்மஸ்வரூபந்தானுள்ளது. ஆனாலனாதியானமாயாசக்தியென்று வழங்கப்படுமோர் அக்ஞானத்தால் அந்த ப்ரம்மஸ்வரூபமென்னுமதிஷ்டானத்தில் அகிலாண்ட சராசரங்களும் தோன்றுகின்றன. அப்படி அக்ஞானவசத்தாற்றோன்றின பவக்கடலில் மூழ்கி மோஹித்துக்கிடக்கும் மானிடர்கள்மீது கருணைகொண்டு பரமேசுவரனாகிய நானே அந்த மாயைவசப்படுத்திக்கொண்டு ஓர் மாயாவியாகி இந்தத்துவைத பிரபஞ்சமாயையால் தோன்றிடினும் ஒருவியவஸ்தையாயுண்டாகி பிராணிகள் கரையேறுவதற்கு கருவியாகட்டுமெனக்கருதி அதை ஒருவரிசையாய் சிருஷ்டித்து பரிபாலித்து ஸம்ஹரித்துப் புதிதாக்கிப் புருஷார்த்தத்திற்கு தக்கபடிசெய்துபரம புருஷார்த்தமாகிய மோக்ஷஸாம்ராஜ்யத்தைப்பெருகும்வரையில் இந்தசிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைலீலையாகச்செய்து வருவோமென சங்கற்பித்து நடத்திவருகிறேன். பிராணிகள் பவக்கடலினின்று கரையேறுவதைத்தவிர எனது பிரவித்திக்கு முற்றும் பிரயோஜனம் கிடையாது. நிராதாரமாய் நிர்விகாரமாய் ஆகாயம்போல் நிர்மலமாய் நிற்கும் நிர்விசேஷ வஸ்துவை இந்த

அத்தியாரோபவழியில்லாமல் வேறுவழியில் போதிக்கமுடியாது. அங்ஙனமே—

अध्यारोपापवादाभ्यां निष्प्रपञ्चं प्रपञ्च्यते ।

"அத்தியாரோப வாதங்களாற்றான் நிஷ்பிரபஞ்சமான பரம் பொருள் போதிக்கப்படவேண்டும்" என்று அன்றோர் கூற்று. ஸூக்ஷ்மவஸ்துவைக்காண்பிவிக்குவிடமெல்லாம் இவ்வழியைத் தவிர வேறுவழியில்லை. உதாரணமாக— கார்த்திகைப்பிறையை காட்டவேண்டுமானல் அதிலில்லாத கிளையின் சம்பந்தத்தைக் கற்பித்தே காட்டுவது வழக்கம். அதுபோலவே தானிங்கும் கண்டுகொள்ளவேண்டும். இது இதர சாஸ்திரங்களிலும் பிரஸித் தமாயுள்ளது, அதாவது வியாகரண சாஸ்திரத்தில்—"ககாத் திற்கும் பகாத்திற்கும் முந்திவரும் விஸர்க்கத்தின் ஸ்தானத்தில் ஜிஹ்வாமூலியம், உபத்மாநீயம், என்ற பாதி விஸர்கத்திற்கொப் பானதுமுறையேவரும்" என்று விதிக்கும், 'कुप्वोः क:पौच' என்று சூத்திரத்தில் ஜிஹ்வாமூலிய உபத்மானீயங்களை அதன் சொரூபத் தில் சம்பந்தப்படாத ககர பகரங்களைச் சேர்த்து ஆரோபித்தே காட்டியிருக்கிறார். ஆகவே ப்ரம்மஸ்வரூபத்தை போதிப்பிக்க முதலில் ஆரோபப்ரகாரத்தைக் கூறுகின்றோம். சிப்பியில் வெள்ளி போலும், கானலில் நீர்போலும், கயிற்றில் அரவம்போலும் நீரிலலைபோலும், நான்கு வகைப்பட்டவைகளான பிராணிகளின் சரீரபேதங்களும், பஞ்சபூதங்களும், பதினான்கு புவனங்களும் தோன்றி மறைகின்றன, முன்னுமில்லாமல் பின்னுமில்லாமல் இடையிற்றோன்றுவதாய் அத்தகைய கிளிஞ்சல்வெள்ளி கானல் நீர்முதலியனபோல் இத்துவைத பிரபஞ்சம் மித்யையென மொழியப்படுகின்றது. அதிஷ்டானவஸ்துவாகிய பரம்பொருள் புலப்படாதவரை திருச்யமாகிய இப்பிரபஞ்சம் வாஸ்தவம் போலவே தோன்றும். கிளிஞ்சல் கண்ணுக்குப்படாதவரையில் அதிற்றோன்றிய வெள்ளி உண்மை வெள்ளியைப்போலல்லவா உணரப்படுகின்றது. உண்மைப்பொருள் விளங்கவேண்டுமே யானல் செய்யப்படும் தர்மங்களையெல்லாம் பலனோடு பரமேசுவர னை என்னிடம் அர்ப்பணம்செய்யவேண்டும். பிராணயாமத் தால் சுவாஸத்தை ஜயித்து மனதையடக்கி என்னிடத்தில் பரம பக்திசெய்யவேண்டும். இந்த ப்ரம்மாண்டமண்டலத்தில் அப்படிச்

செய்த ஒருசிலர்தான் என்னுடைய அனுக்ரஹத்தால் அனுபவ பரியந்தமான ஞானத்தையடைவார்கள். அப்பொழுது நிர்மல மான அவர் மனதில் காரணத்தைத்தவிர கார்யம் வேறல்ல. அதிஷ்டானத்தைத்தவிர அரோபிதம் வேறுபட்டதல்ல என்று தோன்றும். அப்பொழுது எல்லாமென்னிடமே கற்பிதமென்று காண்பான்.

---

# சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

## பரீக்ஷித்மஹாராஜன்.

1. பரம பாகவதன் இவன். சந்த்ர வம்சத்திலே பாண்டவர் குலத்திலே தோன்றியவன். அர்ஜுனனுக்கும் ஸுபத்ரைக்கும் பிறந்தவன் அபிமன்யு. இவரே பரீக்ஷித்தின் தகப்பன். உத்திரை தாய். பாண்டவ கௌரவ சண்டையிலே அச்வத்தாமா என்பவர் ஓர் பாணத்தைவிட்டார். அது பாண்டவப்பூண்டையே அழிக்கும் பாணம். இந்த பாணத்தின் வேகத்தால் இறந்தே பிறந்தான் பரீக்ஷித். பாண்டவகுலத்தைக் காத்த க்ருஷ்ணன் இவரைப் பிழைப்பித்தார்.

2. அக் குலம் குறைந்தபொழுது உண்டானதால் பரீக்ஷித் என இவனுக்குப்பெயர். தாதாவான தர்மரைப்போல் தர்மமாகவே தரணியை ஆண்டான். தைவபக்தி, பெரியோரிடம் அன்பு, ஸத்யம், தானம், ஒழுக்கம், ஜீவகாருண்யம், முதலிய பல குணங்களை உடையவன். தீரன் வீரன். ஒருநாள் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். ஒரு மானைத்துரத்தினான், அதுவேகமாகஓடி ஓர்தபோ வநத்தில் நுழைந்தது.

3. வில்லும்கையுமாக அங்கு சென்றான். தபஸால் உடம்பு வாடிமெலிந்திருந்த ஒரு ரிஷியைக்கண்டான். அவர்பெயர் சமீகர். மானைக்கண்டீரா? என்று கேட்டான். மனதைக் கடவுளிடத்திலே வைத்து மௌனமாயிருந்தார் அவர், ஆதலால் பேசவில்லை. வந்து விட்டது ராஜாவுக்குக் கோபம். செத்தபாம்பை வில்லால்தூக்கி அவர் கழுத்தில்போட்டான். அதற்கும் அவர் ஒன்றும்சொல்ல

வில்லை. மாந அவமானத்தைப் பெரியோர் மதிப்பரா? ஸமமாகவே எண்ணுவர் அல்லவா?

4. குற்றமற்ற பெரியோரை அவமதிக்கலாமா? வந்தது ஆபத்து அரசனுக்கு! சமீகர் பிள்ளை சிருங்கி என்பவர் இதைப் பார்த்தார். அவர் கோபங்கொண்டார். ஏழுநாளில் அவ்வரசன் தக்ஷகன் கடித்து சாவான் என சபித்தார். தயையுள்ள தந்தை மைந்தனைக் கோபித்தார், பொறுமையன்றோ நமக்கு பூஷணம். பொறுமையே தபஸ். பொறுமையே சிறந்த தர்மம். அதை இழந்தாயே, நீயா ரிஷிகுமாரன்? என்றுகண்டித்தார். சிஷ்யன்மூலமாக அரசனுக்குத் தெரிவித்தார். தனக்கு தீங்கைச் செய்தவனிடமும் அன்புகாட்டினர் ரிஷி. அவரன்றோ பெரியார். அதுவன்றோ நற்குணம்.

5. அவரவர் உயிர் அவரவருக்கும் வெல்லமல்லவா? சபை கூட்டினர். ராஜா சாகாவழி கேட்டார். ஒற்றைக்கால் மண்டபம் நாட்டினர். உள்ளே வஸித்தார். வைத்தியரை அழைத்தார். மாந்ரிகரைத் தேடினர். விஷத்தை நீக்குவோருக்கு வேண்டியபொருள் கொடுப்பதாகச் சொன்னர், இதைக்கேட்டு விஷத்தைப் போக்கக் காச்யபர் வந்தார். சாபத்தின்படி கடித்துக்கொள்ள தக்ஷகரும் வந்தார். இருவரும்வழியில்ஸந்தித்தனர். பேசினர். தக்ஷகன் தன் வீர்யத்தைக்காட்ட ஆலமரத்தைக் கடித்தான். அது சாம்பலாக எரிந்தது. தன்சக்தியைக் காட்ட, காச்யபர் மந்திரித்தார். முன்னை விட செழிப்பாக மரம் எழுந்தது. மந்திரத்தின் மஹிமைக்கு அளவுண்டோ?

6. விதியை மதியால் வெல்லமுடியுமா? அரசன் விதிமுடிந்ததை ஞானக்கண்ணுல் கண்டார் கச்யபர். தக்ஷகனிடம் தனத்தைப்பெற்று ஊர்சென்றார். அவ்வேழு நாட்களிலும் பரீக்ஷித் பாகவதத்தைக்கேட்டான். பகவானுன க்ருஷ்ணனது லீலையைச் சொல்லுவது பாகவதம். அதை வியாசருடைய புத்ரான சுகப்ருஹ்மம் கூறினர். பகவானுடைய சரித்திரத்தைக்கேட்பதே புண்யம். அதிலும் உடலைவிடும் காலத்தில் கேட்பதுமிகவும் சிறந்தபுண்யம். ஏன்? அப்போது எந்த எண்ணத்துடன் இறக்கின்றனே அதை அடைவான் என பகவானே கீதையில் சொன்னர்.

7. ஆதலால் இப் பரீக்ஷித்தைப் பாகவத சிகாமணி என்பர். பகவத் குணத்தைக் கேட்டு முக்திபெறலாம். அதற்கு இவரே உதாரணம். அவரவர் செய்த கர்மாவை அவரே அநுபவிக்க வேண்டுமல்லவா? தக்ஷகன் தனது பரிவாரத்துடன் வந்தான். பிராமணன்வேஷந்தரித்து உள்ளே சென்றான். ஸமித் தர்ப்பைப் பழம் முதலியவைகளை அரசனுக்குக் கொடுத்தான். பழத்தை உரிக்கும்போது உள்ளேஇருந்து தக்ஷகன் வெளியே வந்தான், சிறினான், அரசனைக்கடித்துக் கொன்றான், ஐயோ; பெரியோருக்குச்செய்த அவமானத்தினாலன்றோ இக்கதி! எவரையும் அவமதிக்காதே. அதிலும் பெரியோரைப் பழிக்காதே!

8. பகவானது சரிதத்தைக் கேட்டதால் அரசன் உடல் அழிந்தாலும்அவன்வைகுண்டம்சென்றான். தந்தையை ஒத்திருப்பான் மைந்தன். அவருடையபிள்ளை ஜநமேஜயன். அவனும் உத்தமன். அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்தனர். உத்தமர் சரிதத்தை நாமும் கேட்கவேண்டாமா? அவர் சரிதத்தை அடுத்த வாரம் கேட்போம்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

## வாரவிருத்தாந்தம்.

நல்லஞாபகச்சின்னம் 15உ முதல் ருக்மிணீ உபன்யாஸம் என்ற தலைப்பின்கீழ் சென்னையில் பலமத உபன்யாஸங்கள் நடந்தன. இதைச்செய்தவர்உ. வே. பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்யஸ்வாமிகள் அவர்கள். செய்து வைத்தவர்கள் ஸ்ரீமான்களான ஹிந்துபத்ரிகா ஆசிரியர் ஏ. ரங்கஸாமி அய்யங்காரும், அவர் ஸஹோதரர் கோபாலஸாமி அய்யங்காரும். உலக பிரஸித்தமான உபன்யாஸகர். எல்லாமதத்தினரும் ஸந்தோஷப்படும்படி எவரையுந்தூஷிக்காமல் அழகாக எல்லோருள்ளத்திலும் விஷயம் நன்கு பதியும்படி உபன்யஸித்தார். காலஞ்சென்ற ஸஹோதரி ருக்மணியின் ஞாபகச்சின்னமாக இதை அவள் ஸஹோதரர்கள் நடத்திவருகின்றனர். இதுவன்றோ

ஸரியான சின்னம். இதற்கேற்றபடி வர்ணாச்ரமதர்மத்தை வற்புறுத்திச்செய்த உபன்யாஸம் சிறந்ததாகஇருந்தது.

ஜமீன்தாரின் தர்மம்! 17உ இடையக்கோட்டைக் கருகில் உள்ள ஸ்ரீ கோவிந்தராஜப்பெருமாளுக்கு ஷை ஊர் ஜமீன்தார் ஓர் திவ்யாபிஷேகம் செய்துவைத்து எண்ணிறந்த ஜநங்களுக்கு அன்னதானம்செய்தார். இவ்வைபவத்தைத் தானே நேரிலிருந்து நன்கு நடத்திவைத்த ஜமீன்தாரரின் பக்திச்ரத்தையைக் கொண்டாடாமலிருப்பதற்கில்லை. பகவானருளால் குடும்பத்துடன் அவர்வாழ்க.

பக்தர்வாழ்க! 17உ நாமநாயக்கன் பட்டியில் ஸன்மார்க்கப் பஜனைகோஷ்டியின் ஐந்தாமாண்டுவிழா விமர்சையாக நடந்தது. பகலில் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. இரவில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனாது பட்டாபிஷேகபடத்திற்கு விசேஷ வைபவத்துடன் க்ராம ப்ரதக்ஷிணம் நடைபெற்றது, இக்கடினகாலத்தில் அன்னதானத்திற்குப் பாத்ரமான பசியுள்ள ஏழைகளுக்குச்செய்த தானமும் பகவத்பக்தியும் பக்தர்களது மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வதுடன் நற்கதியும் அளிக்கும்.

பத்மநாபதாஸர். 18உ திருவநந்தபுரத்தில் பத்மநாப ஸ்வாமிக்கும் ப்ரஹ்மோத்ஸவம் நடந்து பூர்த்தியானது. தீர்த்தம் கொடுக்கஸ்வாமி கடற்கரைசென்றார். மூன்றுமைல் தூரமுள்ள கடலுக்கு அத்தேச மஹாராஜா உருவியவாளுடன் கால்நடையாக ஸ்வாமிக்கு முன்னேசென்றார். பத்மநாபஸ்வாமிக்கு தாஸனாக இருந்து அரசாள்வதாக அங்கு ஐஹ்தியம். உண்மையான தாஸனாக இருந்து பக்திச்ரத்தையுடன் பகவத் கைங்கரியத்திலீடுபட்டு கால் நடையாகச்சென்ற மஹாராசாவின் குணத்தைக் கொண்டாடுகிறோம்.

நல்லதீர்மானம். 19உ மைலாப்பூர் சிரோமணி வித்வன்மண்டலத்தார் ஓர் இலவச ஸம்ஸ்கிருதவகுப்பை நடத்துவதாகத் தீர்மானித்தனர், தன்னிடம் வந்தவர்களுக்கு தர்மமாகவே கற்பிக்சப் பலபண்டிதர்கள் ஸஜ்ஜமாயிருக்கின்றனர். லௌகிகர் என்போர் ஓர் கோஷ்டியாகச்சேர்ந்து ஒழிந்த காலைமாலைகளில் ஸம்ஸ்கிருதம் கற்க ஆரம்பித்தால் அவர்கள் க்ஷேமமடைவதோடு

பாஷையும் பிரசுரமாகும். பண்டிதர்களே கொஞ்சம் ச்ரமம் எடுத்துக்கொண்டு லௌகிகரைப் படிக்கும்படி தூண்டுவார்களா? இவர்களை நாம் தூண்டுவருகிறோம்.

குலவித்யை. பலபக்தர் நமது ஸ்ரீ ஜகதாசார்யாளை தர்சிக்கின்றனர். ஸ்ரீ அவர்களது ஸன்னிதானமஹிமையால் பூர்ண வைதிக ச்ரத்தையை அவர்கள் அடைவதில் ஆச்சரியமில்லை. ஸர்ப்பபலி என்பது என்னஎன்றே பலர் அறியமாட்டார். நாகப்ரதிஷ்டையை புத்ரேச்சுக்கள் அறியாமலிரார். வைதிகஸம்ஸ்காரமான நாற்பதில் ஸர்ப்பபலி பாகயக்ஞத்தில் ஒன்று, ஸ்ரீ ஸன்னிதான உத்திரவுபடி மாம்பலம் ப்ராஹ்மணஸபை கார்யதர்சி அதை அநுஷ்டித்தவுடன் நம்குல வித்யையான வேதத்தைக் கற்பிக்க மேலமாம்பலம் ஸ்ரீ ராமமந்திரத்தில் (5 நெ. புதுத்தெரு) ஓர் வகுப்பைநடத்துகிறார். கேவலகாவ்யம் கற்போர் இதையும் ஆதரிப்பரா?

வேதசாஸ்த்ர பரிஷத். 23உ பஜவாடாவில் ஸ்ரீ பி. வி. ரமணய்ய பந்துலுவின் தலைமையில் ஷ்டி ஸபை விமர்சையாகநடந்தது. பலவிடங்களிலிருந்தும் பண்டிதோத்தமர் வந்தனர். சாரதாசட்டத்தைக் கண்டித்தனர். நம்தேசத்தவர் விழிப்பரா?

சென்னைமாகாணப்ராஹ்மணசபை. 24உ சித்தூரில் ஷ்டி ஸபை சிறப்பாகநடந்தது. ஸ்ரீ மஹா ஸன்னிதான பாததூளி அங்குபட்டதால் உத்ஸாஹமும் ஆஸ்திக்யமும் உண்டாயிருக்க வேண்டும். பற்பல தலைவர்கள் வந்திருந்தனர். சாரதாசட்ட கண்டநமும் திருத்தச்சட்ட ஆதாவும் தீர்மானிக்கப்பட்டது. வருஷம்பூராவும் இவ்வுத்ஸாஹம் குறையாதிருக்கவேண்டும் என்பது நம் ப்ரார்த்தனை.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

---